**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No.154/2018**

| | | |
|---|---|---|
| L.W.12 P.W.:12 | | |
| D.W. : | | |
| Name : | **டாக்டர் மோகன்ராஜ்** | Caste : |
| Father's Name : | கோவிந்தராஜ் | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2021.

**முதல் விசாரணை:**

நான் தற்பொழுது திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2018ஆம் தேதி வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது காலை 11.00 மணிக்கு வேதாரண்யம் காவல் நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தினை காவலர் 1297 திரு. முருகானந்தம் என்பவர் மூலமாக வழக்கில் இறந்துபோன செல்வம் வயது 42 என்பவரின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்தை பெற்று அன்றைய தினமே சவக்கிடங்கில் வைத்து காலை 11.25 மணிகசு சடலக்கூராய்வு மேற்கொண்டேன். பிரேதமானது உரிய உடல் விறைப்பு தன்மையுடன் இருந்தது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. மூக்கு வாய் வழியாக சளியோ, இரத்தக்போக்கோ எதுவும் இல்லை. நெஞ்சு மற்றும் வயிற்று பகுதிகள் நல்ல நிலையில் இருந்தது. உயிர் உறுப்பில் வெளிப்புற காயங்கள் இருந்தது. (1) வலது பக்க தொடையில் 3 x 2 செ.மீ. அளவுள்ள ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. (2) வலது முழங்கையில் 4 x1 x 1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது. (3) இடது கண் மேல் இமையில் 1 x 1 x 1 செ.மீ. அளவுள்ள ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. (4) இடது பக்க மூக்கில் 2 x 1/2 x 1/2 செ.மீ. அளவுள்ள ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. (5) வலது பக்க கண் இமையில் 1 x 1 செ. மீ. அளவுள்ள ஒரு இரத்தக்கட்டு இருந்தது.

உட்புற காயங்கள்: வயிறு மற்றும் குடல் பகுதிகள் காலியாக இருந்தது. கல்லீரல் மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் வெளிர் நிறத்தில் இருந்தது. மார்பு கூட்டை திறந்து பார்த்ததில் நுரையீரலில் இரத்தப்போக்கு எதுவும் இல்லாமல் இருந்தது. நுரையீரல் வெளிர் நிறத்தில் இருந்தது. இருதயத்தில் உள்ள அறைகள் எதுவும் இரத்தம் இல்லாமல் காலியாக இருந்தது. மண்டை ஓட்டை திறந்து பார்த்ததில் மூளை இரத்தப்போக்கு இல்லாமல் நல்ல நிலையில் இருந்தது. கபாலத்தில் எலும்பு முறிவு எதுவும் இல்லை. விலா எலும்புகள் நல்ல நிலையில் இருந்தன. வலது பக்க தொடை எலும்பு முறிந்து காணப்பட்டது. வலது முட்டி சிதைந்து இருந்தது. வலது காலில் முட்டிக்கு கீழ் உள்ள இரண்டு எலும்புகளும் முறிந்து காணப்பட்டது. இடது பக்க கால் முட்டிக்கு கீழே உள்ள எலும்பு இரண்டும் உடைந்திருந்தது. மேற்படி இறப்பானது 12 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் நிகழ்ந்திருக்கக்கூடும். இறப்பிற்கான காரணம்: பலதரப்பட்ட பெரிய எலும்பு முறிவின் காரணமாக ஏற்பட்ட அதீத இரத்தப்போக்கினால் இறப்பு நிகழந்திருக்கக்கூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய சடலக்கூராய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

இறந்த நபருக்கு வலது பக்க முட்டியில் மட்டும் தான் எலும்பு முறிவு காணப்பட்டது என்றால் சரிதான். கனமான பொருட்கள் முட்டியின் மேல் விழுந்தால் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. பிரேதத்தின் மீது சேறு அல்லது நீர்நிலைகளில் இருந்து பிரேதத்தை பெறப்பட்டதாகவோ அல்லது பிரேதத்தின் மீது சேறு அல்லது நீர் ஆகியவை இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இரண்டு கனமான பொருட்களின் இடையே சிக்கி முச்சுதிணறல் ஏற்பட்டு இறந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.